


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாள் விழா மாபெரும் பொதுக் கூட்டம் மார்ச்–1 அன்று நடைபெறுவதை முன்னிட்டு நேற்று (21–2–2025) எஸ்.ஆர்.பி. டூல்ஸ் அருகே உள்ள கொட்டிவாக்கம் ஒய்.எம்.சி.ஏ., மைதானத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ராட்ச பலூன் ஒன்றை பறக்கவிட்டார். இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர் எஸ். அரவிந்த்ரமேஷ், மாவட்ட துணைச் செயலாளர்கள் பாலவாக்கம் த.விஸ்வநாதன், பாலவாக்கம் மு.மனோகரன், பகுதி கழக செயலாளர்கள் பெருங்குடி எஸ்.வி.ரவிச்சந்திரன், வி.இ.மதியழகன், ஒன்றியக் கழக செயலாளர் கோவிலம்பாக்கம் வெங்கடேசன் உள்ளிட்ட ஏராமானோர் உள்ளனர்.

## உலகத் தாய்மொழி நாளில் இதுவே நமது உறுதி!

# சமஸ்கிருதப் பண்பாட்டுப் படையெடுப்பை முறியடிப்போம்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, பிப். 22-

சமஸ்கிருதப் பண்பாட்டுப் படையெடுப்பை முறியடிப்போம்! இதுவே உலகத் தாய்மொழி நாளில் நமது உறுதியாகும் என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:



தமிழ்நாட்டின் பள்ளிக் கல்வித் துறையின் மூலம் மாணவர்களின் கல்விக்குச் சேரவேண்டிய நிதியைத் தரக் கோரி தமிழ்நாட்டின் முதலமைச்சர் சமூகநீதிக்கான சரித்திர நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்தியப் பிரதமருக்கு நேற்று (20.2.2025) கடிதம் எழுதியிருந்த நிலையில், இன்று (21.2.2025) ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் தமிழ்நாட்டின் முதலமைச்சருக்குக் கடிதம் எழுதியுள்ளார். அதில் மீண்டும் தேசியக் கல்விக் கொள்கையைத் திணிக்க வேண்டும் என்னும் நோக்கமே வெளிப்படுவது கண்டனத்திற்குரியதாகும்.

### தமிழ்நாடு, தொடக்கம் முதலே ஹிந்தித் திணிப்பை எதிர்த்து வருகிறது!

மும்மொழிக் கொள்கைக்குக் கடும் கண்டனத்தைத் தமிழ்நாட்டின் அனைத்துக் கட்சிகளும், மக்களும், மாணவர்களும் தெரிவித்துள்ள நிலையில் அதைக் குறித்து கொஞ்சமும் கவலை கொள்ளாமல், தர்மேந்திர பிரதான் கடிதம் எழுதியுள்ளார். மும்மொழிக் கொள்கை என்னும் பெயரில் ஹிந்தி சமஸ்கிருதத் திணிப்பை அரங்கேற்றத் தான் ஒன்றிய அரசு துடிக்கிறது என்பது வெள்ளிடை மலை. இது மொழித் திணிப்பு மட்டுமல்ல; ஆரிய சமஸ்கிருதப் பண்பாட்டுத் திணிப்பாகும்! இதனைத் தெளிவாகப் புரிந்த காரணத்தால் தான் தந்தை பெரியார் மண்ணான தமிழ்நாடு, தொடக்கம் முதலே ஹிந்தித் திணிப்பை எதிர்த்து வருகிறது.

### ஒன்றிய பா.ஜ.க. அரசை எச்சரிக்கின்றோம்!

மக்களின் உரிமைக் குரலைக் கேட்காமல், அதிகாரத் தோரணையில் நடந்து கொண்டால், தமிழ்நாட்டின் எழுச்சி எத்தகையது என்ற வரலாற்றை மீண்டும் ஒன்றிய பா.ஜ.க. அரசு பார்க்க வேண்டியிருக்கும் என்று எச்சரிக்க விரும்புகிறோம்!

உலகத் தாய்மொழி நாளில், நம் தாய் மொழியாம் தமிழ்மொழியைக் காக்கவும், மொழித் திணிப்பை எதிர்க்கவும் உறுதிபூணுவோம்!

சமஸ்கிருதப் பண்பாட்டுப் படையெடுப்பை முறியடிப்போம்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை விடுத்துள்ளார்.








சென்னை மேற்கு மாவட்டம் சேப்பாக்கம் பகுதி 62(அ) வட்ட தி.மு.க. சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் மு .க ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு சிந்தாதிரிப்பேட்டை சிங்கன செட்டி தெருவில் நடந்த விழாவில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார். அருகில் தயாநிதிமாறன் எம்.பி., மாவட்ட செயலாளர் சிற்றரசு, பகுதி செயலாளர் மதன்மோகன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## தமிழ்நாட்டு மீனவர்கள் மீது

# வன்முறைத் தாக்குதலை ஒருபோதும் ஏற்க முடியாது என இலங்கை அரசிடம் எடுத்துரைப்பு!

## மக்களவைக் கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலுவுக்கு – ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கையை விளக்கி வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் கடிதம்!

புதுடெல்லி, பிப். 22-

தமிழ்நாட்டு மீனவர்கள் மீது வன்முறை தாக்குதலை கட்டவிழ்த்து விடுவதை ஒருபோதும் ஏற்க முடியாது என இலங்கை அரசிடம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக, மக்களவை திமுக குழுத்தலைவர் டி.ஆர். பாலுவிடம், வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு மீனவர்கள் இலங்கை கடற்படையால் தாக்கப்படும் விவகாரம் தொடர்பாக, மக்களவை தி.மு.க. குழுத்தலைவர் டி.ஆர்.பாலு, நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியிருந்தார். இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக, டி.ஆர்.பாலுவுக்கு ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் கடிதம் எழுதியுள்ளார். அதில், கடந்த டிசம்பர் மாதம் இலங்கை அதிபர் திசநாயகே, டெல்லி வந்திருந்தபோது தமிழ்நாடு மீனவர்கள் விவகாரம் தொடர்பாக பேசப்பட்டதாக கூறியுள்ளார். தமிழ்நாட்டு மீனவர்களை மனிதாபிமானத்துடன் அணுகவேண்டும் என்றும், அவர்கள் மீது வன்முறையாக நடந்து கொள்ளக்கூடாது என்றும் வலியுறுத்தப்பட்டதாகவும் அந்த கடிதத்தில் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். மேலும், தொடர்ச்சியாக தமிழ்நாடு மீனவர்களை கைது செய்வதையும், அதிகப்படியான அபராதங்கள் விதிப்பதையும் இலங்கை அதிபரிடம் சுட்டிக் காட்டியதாகவும் கூறியுள்ளார். மீனவர்கள் விடுதலை, அவர்களது படகுகளை விடுவித்தல் மற்றும் மீனவர்களுடன் பேச்சு வார்த்தை ஆகியவற்றை இலங்கை அதிபரிடம் வலியுறுத்தியதாகவும், கடந்த ஜனவரி 28 ஆம் தேதி, தமிழ்நாடு மீனவர்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூடு குறித்து இலங்கை வெளியுறவு அமைச்சகத்திடம் கடும் எதிர்ப்பை இந்தியா பதிவு செய்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். மீனவர்கள் மீது வன்முறை தாக்குதலை கட்டவிழ்த்து விடுவதை ஒருபோதும் ஏற்க முடியாது என்றும் இலங்கை அரசுடன் இந்திய அரசு தரப்பில் வலியுறுத்தப்பட்ட விவகாரங்கள் தொடர்பாக, மக்களவைதிமுககுழுத்தலைவர் டி.ஆர்.பாலுவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

## மு.சண்முகம் எம்.பி. தலைமை ! திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு எழுதிய

# “சுயமரியாதை இயக்க வரலாறு” - இரண்டு பாகங்கள் நூல் - கி.வீரமணி இன்று வெளியிடுகிறார்!

## ஆ.இராசா எம்.பி. - பேராசிரியர் சுப.வீரபாண்டியன் - டி.கே.எஸ்.இளங்கோவன் ஆய்வுரை!

சென்னை, பிப்.22-

திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு அவர்கள் எழுதிய “திராவிட இயக்க வரலாறு நூல்” (இரண்டு பாகங்கள்) திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் வெளியிட, கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ. இராசா எம்.பி. பெற்றுக் கொள்கிறார். இந் நூல் வெளியீட்டு விழா, இன்று (22 ஆம் தேதி) சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெறுகிறது.

இது பற்றிய விவரம் வருமாறு :-

திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு அவர்கள் எழுதிய “சுயமரியாதை இயக்க வரலாறு” (இரண்டு பாகங்கள்) நூல் வெளியீட்டு விழா இன்று (22.2.2025 - சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில் சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெறுகின்றது.

நூல் வெளியீட்டு விழாவிற்கு தொ.மு.ச. பேரவை பொதுச் செயலாளர் மு.சண்முகம் எம்.பி. தலைமை வகிக்கிறார்.

தொ.மு.ச. பேரவை தலைவர் கி.நடராசன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

நூலாசிரியர் - திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு அவர்கள் நூல் அறிமுக உரை நிகழ்த்து கிறார்.

“சுயமரியாதை இயக்க வரலாறு” இரண்டு பாகங்கள் - நூலை திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் வெளியிட்டு சிறப்புரை யாற்றுகிறார்.

நூலை பெற்றுக் கொண்டு கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. சிறப்புரை யாற்றுகிறார்.

திராவிட இயக்க தமிழர் பேரவை பொதுச் செயலாளர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன், தி.மு. கழக செய்தித் தொடர்பு தலைவர் டி. கே.எஸ். இளங்கோவன், கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ., திராவிடர் கழக பிரச்சாரச் செயலாளர் வழக்கறிஞர் அ. அருள் மொழி ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்து கின்றனர்.

திராவிடர் கழக துணைப் பொதுச்செயலாளர் ச.பிரின்ஸ் என்.ஆர்.எஸ். பெரியார் இணைப்புரை நிகழ்த்துகிறார்.

நக்கீரன் பதிப்பகம் தி.சிற்றரசு நன்றி கூறுகிறார்.

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# ஓராண்டிற்கு காலை உணவு வழங்கும் திட்டம்!

## கொளத்தூர் மேற்கு பகுதியில் அமைச்சர் – மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, பிப். 22-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் காலை உணவு வழங்கும்சிறப்புமிகுதிட்டத்தின் இரண்டாம் நாள்.

கொளத்தூர் மேற்கு பகுதியில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்.

இது பற்றிய விபரம் வருமாறு:

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 2ஆம் நாளான நேற்று (21.2.2025) 1) கொளத்தூர் மேற்கு பகுதி, மண்டலம்6, வார்டு69, ஜி.கே.எம் காலனி, ஜம்புலிங்கம் பிரதான சாலை, 20வது தெரு மற்றும் 2) கொளத்தூர் மேற்கு பகுதி, மண்டலம்6, வார்டு64, ஜி.கே. எம் காலனி, ஜம்புலிங்கம் பிரதான சாலை, 34வது தெருவில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு பொது மக்கள் மற்றும் சிறுவர்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மேயர் ஆர்.பிரியா ராஜன் அவர்கள், பகுதி செயலாளர் ஏ. நாகராஜன், கே.சந்துரு, சி.மகேஷ்குமார், சரிதா மகேஷ்குமார், தாவூத் பீ, ராஜன், ஸ்ரீதணி, சாரதா மற்றும் இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப் குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இக்காலை உணவு திட்டத்தில் வட்ட கழக செயலாளர்கள் எம்.ஜே.சி. பாபு, எம்.டி.தமிழ்செல்வன் ஆகியோர் நன்றி கூறினார்கள்.



